தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திண்டுக்கல்

**S.C. 71 /2019**

| அசா :1 | |
|---|---|
| பெயர்: திருமதி.சேசுமேரி | தொழில் : |
| கணவர்/தகப்பனார் பெயர் : சிறுமணி | மதம் : |
| கிராமம்: | வயது : |
| தாலுகா: | தேதி : **28.06.2022** |

இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 ( பிரிவு 4)ன்படி சாட்சிக்கு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப் பட்டது

---

பட்டியல் சாட்சி 1 திருமதி.சேசுமேரி என்பவர் ஆஜர். பிரமாணம் போதிக்கப்பட்டு அ.சா. 1 ஆக முதல் விசாரணை செய்யப்பட்டார்.

நான் தற்போது பெத்தனியா தெரு, வத்தலக்குண்டில் குடி இருக்கிறேன். ஆஜர் எதிரிகளை தெரியாது. வழக்கு சம்பந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. சம்பவம் பற்றி எனக்கு எதுவும் தெரியாது. புகார்மனுவில் உள்ள கைரேகை என்னுடையது தான். அந்த கைரேகை மட்டும் அதசாஆ.1. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்வதற்கு அனுமதி கேட்டதன் பேரில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறது.

அரசு தரப்பு குறுக்கு விசாரணை

கடந்த 4.12.2010ம் தேதி மதியம் 12 மணி அளவில் என் மகன் வின்செண்டை எதிரிகள் முன் விரோதம் காரணமாக கத்தி, கம்பு, அருவாளால் தாக்கினர். எதிரி சந்திரபோஸ் என்பவர் கையில் வைத்திருந்த கத்தியால் வயிற்றில் குத்தினார். ஞானப்பிரகாசம் கத்தியால் அல்லையில் குத்தினார். மற்ற எதிரிகள் கம்பியால் அடித்தனர். பின்னர் கொலை மிரட்டல் விடுத்து சென்றனர். என் மகன், மருமகன், பேரனை எதிரிகள் அடித்தனர். காயம்பட்டவர்கள் அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றனர் என்றும் நான் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தேன் என்பதை விசாரணை

அதிகாரியிடம் சொல்லி விட்டு தற்போது எதிரிகளுக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**(Sd.)J.Mohana, CJM, Dindigul.**

தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திண்டுக்கல்

**S.C. 71 /2019**

| | |
|---|---|
| அசா **:2** | |
| பெயர்: திரு.வின்செண்ட் | தொழில் : |
| கணவர்/தகப்பனார் பெயர் : | மதம் : |
| கிராமம்: | வயது : |
| தாலுகா: | தேதி : **28.06.2022** |

இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் **1969** ( பிரிவு **4)**ன்படி சாட்சிக்கு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப் பட்டது

பட்டியல் சாட்சி **2** திரு.வின்செண்ட் என்பவர் ஆஜர். பிரமாணம் போதிக்கப்பட்டு அ.சா.**2** ஆக முதல் விசாரணை செய்யப்பட்டார்.

நான் தற்போது பெத்தனியா தெரு, வத்தலக்குண்டில் குடி இருக்கிறேன். கூலி வேலை செய்கிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். அவர்கள் பக்கத்து வீட்டுக்காரர்கள் ஆவார்கள். **4.12.2010**ம் தேதி சனிக்கிழமை மாலை **5.15** மணி அளவில் நான் என் வீட்டிற்கு வெளியே கட்டில் போட்டு அமர்ந்து இருந்தேன். பட்டிவீரன்பட்டியில் இருந்து வந்த ஆம்னி வேன் **TN 59 M 5757** என் வீட்டின் முன் நின்றது. சந்திரபோஸ் என்ற உலகநம்பி என்பவர் வண்டியில் இருந்து **10** பேருடன் இறங்கினார். கத்தி, கம்பு, கம்பி ஆகிய ஆயுதங்களுடன் அவர்கள் இறங்கினர். அப்போது சந்திரபோஸ் இவன்தாண்டா வின்செண்ட் என்றும் இவனை குத்தி கொன்றால் தான் காடு நமக்கு கிடைக்கும் என்று கூறினார். திருலோகபோஸ் என்ற திருமாச்செழியன் என் வலது கையை பின்பக்கமாக பிடித்துக் கொண்டார். சார்லஸ் என் இடது கையை பின் பக்கமாக பிடித்துக் கொண்டார். எதிரி மைக்கேல்ராஜ் என் இடுப்பை இறுக்கமாக பிடித்துக் கொண்டார். உலகநம்பி என்பவர் இத்தோடு செத்து தொலைடா நாயே என்று கூறி கத்தியால் வயிற்றின் மேல் புறத்தில் குத்தினார். நான் கீழே விழுந்து விட்டேன். அதன் பின்னர் அருள் ஞானப்பிரகாசம் , வனத்தப்பர் , உலகநம்பி வைத்திருந்த கத்தியை பிடுங்கி எனது வலது பக்க அல்லையில் குத்தினார். அப்போது என் அம்மா கத்தியை பிடித்ததில் இடது கையில் காயம் ஏற்பட்டது. நான் தடுமாறியவுடன் என் மகன் ஜெயபிரகாசம் என் அப்பாவை ஒன்றும் செய்யாதீர்கள் என்று கத்தினார். எதிரி சார்லஸ் என்பவர் என் மகனின் உச்சந்தலையில் கம்பியால் அடித்ததில் அவருக்கு ரத்தக்காயம் ஏற்பட்டது. திருமாச்செழியன் என்

மகன் இடது கையை பின்பக்கமாக முறுக்கி பிடித்து இழுத்ததில் இடது பக்க தோள்பட்டை இறங்கி விட்டது. அருளப்பன், செவுத்தியார், சேசு, இனிக்கோ ஆகியோர் என் அம்மா, மனைவி ஜெசிந்தா பாக்கியத்தை கம்பால் அடித்தனர். சத்தம் கேட்டவுடன் அக்கம்பக்கத்தினர் கூடினர். கம்பு, கத்தி, கம்பியை கீழே போட்டு விட்டு வின்செண்ட் இப்போது தப்பித்து விட்டாய், உன்னை கொல்லாமல் விட மாட்டோம் என்று கூறி காரை வத்தலக்குண்டு நோக்கி செலுத்தினார். இது சம்பந்தமாக எனது அம்மா சேசுமேரி காவல்நிலையத்தில் புகார் அளித்தார். என்னை போலீசார் என்னை விசாரித்தனர்.

( சான்று பொருள் குறியீடு செய்ய வேண்டி அரசு தரப்பு வழக்கறிஞர் கால அவகாசம் கோரி வழக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.)

**(Sd.)J.Mohana, CJM, Dindigul.**